# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 82** **நாள்: 14.06.2018**

## அரும்பாக்கம் இந்து மயானபூமியில் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால், பொதுமக்கள் வேலங்காடு மற்றும் நுங்கம்பாக்கம் இந்து மயானபூமியை பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு

= = = =

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, மண்டலம்–8 (அண்ணாநகர்), கோட்டம்–100, அரும்பாக்கத்தில் உள்ள இந்து மயானபூமியில் உடலை எரிக்கும் இயந்திரத்தில் பழுது ஏற்பட்டுள்ளது. அதனை சீர்செய்யும் பொருட்டு **16.06.2018** முதல் **30.06.2018** வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், பராமரிப்பு பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் அருகிலுள்ள அண்ணாநகர் நியூ ஆவடி சாலையில் அமைந்துள்ள வேலங்காடு இந்து மயானபூமி மற்றும் நுங்கம்பாக்கம் இந்து மயானபூமியை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**